359

/பதிவஞ்சலில் /ஒப்புகை அட்டையுடன்/
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை-600 028.

மே.எ.எண்.53168/கே2/2019-1 நாள்.30.12.2021

அரசாணை (3D) எண்.16, வணிகவரி மற்றும் பதிவு(M2)த்துறை, நாள் 21.12.2021 சார்பு செய்யப்படுகிறது.

செல்வி.ச.வஜிரா, இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள திருப்பூர் மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப திருப்பூர் மாவட்டபதிவாளர் கோரப்படுகிறார்.

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

பெறுநர்:
செல்வி.ச.வஜிரா, இளநிலை உதவியாளர்.
(திருப்பூர் மாவட்ட பதிவாளர் மூலம்)

நகல்:
1.மாவட்ட பதிவாளர், திருப்பூர்.
(அசல் சான்றுகளுடன்)
1.S.S.L.C.மதிப்பெண் சான்று பதிவு எண்.2031653/மார்ச் 2014.
2.H.S.C. மதிப்பெண் சான்று பதிவு எண்.236995/மார்ச் 2016.
3.Provisional Certificate.
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
3.முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1

361

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS

சென்னை-600028
22 DEC 2021

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – செல்வி.ச.வஜிரா, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத்(எம்.2)துறை**

**அரசாணை (3D) எண்.16** **நாள் 21.12.2021**
**பிலவ, மார்கழி – 06**
**திருவள்ளுவர் ஆண்டு–2052.**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/ 2018–9, நாள் 04.12.2020
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.53166/கே2/2019, நாள் 31.08.2021.

*******

**ஆணை:**

பதிவுத்துறையில், கன்னியாகுமரி மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 16.10.2019 அன்று காலமான திரு க.சந்திரதாஸ் என்பவரின் மனைவி திருமதி.C.விஜயலட்சுமி தமது மகள் செல்வி.ச.வஜிரா, என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 14.10.2020–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், செல்வி.ச.வஜிரா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, செல்வி.ச.வஜிரா, 17.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். செல்வி.ச.வஜிரா, இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி சுவர்ந்தாய்வு செய்து தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், திருப்பூர் மாவட்டத்தில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி.ச.வஜிரா, என்பவரை 17.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது இவ்வாறு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதியின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.70006/ட்டி1/2021, நாள்.26.11.2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.37337/ஜி1/2021-1, நாள் 14.12.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.
செல்வி.ச.வஜிரா, இளநிலை உதவியாளர்,
திருப்பூர் பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)

**நகல்:**
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை,
சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.